1972 சனவரி 29]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இந்தச் சாலை அமைப்புக்கு ஒப்புதல் ஏற்கெனவே வழங்கப்பட்டு விட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார். இந்த அழகர் கோவில் சாலைக்கு ஒப்புதல் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். இது எவ்வளவு காலத்திற்குள் அமைக்கப்படும். ஒரு மைல் தூரந் தான் இருக்கிறது என்பதால் சிக்கிரமே அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இந்த சாலை அமைக்க ஒப்புதல் சமீபத்தில்தான் தரப்பட்டிருக்கிறது. சுமார் 2 மைல், 3 பர்லாங்கு தூரத்திற்கு அமைக்கப்படவேண்டும். அதற்கான எஸ்டிமேட் தொகை ரூ. 3:17 அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

Contribution to Government Arts College at Tiruttani

* 159 *Q.*—Thiru E. S. THYAGARAJAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state whether the Tiruttani Sri Subramania Swami Devasthanam has paid the contribution of Rs. 5,00,000 to the Government promised for opening a Government Arts College at Tiruttani?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லை. நிதி வழங்கும் முறையினைப் பற்றி நிர்வாக அதிகாரி, அரசினை அணுகியுள்ளார்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, திருத்தணிக் கலைக் கல்லூரிக்கு கிடைத்திருக்கும் 20 ஏக்கர் நிலம் போதாது, மேலும் தேவைப்படுகிறது என்பதால், இன்னும் 20 ஏக்கர் நிலம் தேவஸ்தானத்திலேயே வாங்கித்தரக் கூடிய சூழ்நிலையை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, இது அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டிய நிதியைப் பற்றிய கேள்வி. இடம் பற்றிய விவரக் குறிப்பு என்னிடத்தில் இல்லை.

கோவில்களில் தமிழில் அர்ச்சனை.

* 160 **வினா.—திரு. கே. என். குமாரசாமி** : மாண்புமிகு அறநிலைய துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் அர்ச்சனை சுலோகங்களை ஒவ்வொரு கோயில்களிலும் தமிழில் எழுதி வைக்கின்ற செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லை.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் பல்வேறு கோவில்களிலும் சமஸ்கிருத சுலோகங்களை